சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

VOL - 10. | October 1914. | No - 3.
தொகுதி - 10. | அக்டோபர் 1914. | பகுதி - ௩.

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

இல்வாழ்க்கை நிலையிலிருந்தொழுகுகின்றவன் தான் வாழும் ஊராருடன் பகைகொள்ளாதிருந்தாற்றான், இடையூறின்றி வாழ்வதற்குரியவனாவன்; இன்றேல் அவன் வாழ்க்கை நெருஞ்சிமுள் நிறைந்துள்ள நெறியில் பிரயாணஞ் செய்வதுபோலவாம். பகையின்றி வாழ்வது முடியாதென்று கருதுவதொழிந்து கூடுமானவளவும் பகையில்லாது வாழமுயல்வது ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாத கடமையாம். ஒருவனுக்கு அவன் வசிக்கும் ஊரார் பகைவராயிருப்பாராயின், அவன் எந்தக் காரியத்தையாவது கடைபோகச் செய்வது முடியுமோ? மனைவி மக்கள் முதலாயினரையும், மாடு மனை காணி முதலியவற்றையும் துக்க வடிவமெனக் கண்டு, உண்மையாகத் துறவறத்தை மேற்கொண்டொழுகுகின்றவராகிய சந்நியாசிகளுக்கும் உண்டி, உடை, உறையுள் முதலியவற்றிற்காகப் பிறருடைய உதவி அவசியமாக வேண்டுவதாமாயின், இல்வாழ்க்கை நிலையிலிருந்தொழுகுகின்றவனுக்குப் பிறருடைய உதவி அவசியமாக வேண்டுமென்பது பற்றிச் சொல்லுதலும் வேண்டுமோ? இல்லறத்தான் பிறருதவியின்றி வாழ்வது எவ்வாற்றானும் முடியாதாகலின், அவன் தான்வசிக்கும் ஊராருடன் பகைகொள்ளாமலொழுகினாற்றான், அவனது குடும்பம் கவலையின்றி வாழ்வதற்குரியதாம்.

பகை உண்டாவதற்குக் காரணம் என்னவென்று நன்கு சீர்தூக்கி நோக்குவோமாயின், அக்காரணம் கோபமேயாமென்பது

நன்குவிளங்கும். இதனாற்றான் பெரியார் "கோபமேகொடும்பகை" என்று திருவாய்மலர்ந்தருளினர். கோபமுண்டாவதற்குக் காரண மென்னவென்று நோக்குவோமாயின், அக்காரணம் பேதைமையும் புல்லறிவாண்மையுமாமெனச் செவ்விதாகத் தோன்றும். பேதைமையாவது [illegible]து இது தவிர்வது இது என்பனவற்றுள் ஒன்றுமறி[illegible]யாம். புல்லறிவாண்மையாவது ஒருவன் தான் சிற்றறிவினனா யிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து, உயர்ந்தோர்கூறும் உறுதிச் சொற்களை யேற்றுக்கொள்ளாதிருத்தலாம். இவ்விரண் டாலுமே கோபமுண்டாகின்றது; அதனால் பிறரோடு பகைத்தல் சம்பவிக்கின்றது. இல்வாழ்க்கை நிலையிலிருந் தொழுகுகின்றவன் கோபத்திற்குக் காரணமாய பேதைமையும் புல்லறிவாண்மையுமில் லாதிருப்பானாயின், அவன் தான் வசிக்கும் ஊராரோடு பகைத்தல் ஒருவாற்றானுமில்லையாம். பகைக்குக் காரணம் கோபம், கோபத்திற்குக் காரணம் பேதைமையும் புல்லறிவாண்மையு மென்று நன்கு துணிந்து, பேதைமையையும் புல்லறிவாண்மை யையும் பிரயத்னபூர்வகமாக ஒழித்து எவர்மீதும் கூடுமானவள வும் கோபஞ்செய்யாதிருப்பவனுக்குப் பகைவரில்லாமையால், அவன் தான் கருதியவனைத்தையும் பெற்றுச் சுகமாக வாழ்தற் குரியவனாவன்.

தான் வசிக்கும் ஊராரோடு பகைத்திருப்பவனுக்கு அவ் வூராருள் எவரும் உதவி செய்வதின்மையின், அவன் எவ்வளவு சம்பத்துடையவனாயினும், சுகஜீவியாய் வாழ்வதில்லையாம். அவ னெப்போதும் யார் என்னசெய்யப்போகின்றனரோ? என்று நடு க்கமடைதற்குரியவனாகின்றான். அவன் வீட்டில் கள்வர் புகுவது எளிதாம். கள்வர் இவன் தான் வசிக்கும் ஊராருடன் பகைகொண் டிருக்கின்றான்; இவனுக்குதவிசெய்ய வருவாரொருவருமிலரென் றுணர்வாராயின், அச்சமின்றி, அவன் வீட்டிற்குக் கொள்ளையிட வருவர். அவன்வீட்டில் நடக்கும் சுபாசுபங்கள் சிறப்பாக நடை பெறுவதில்லையாம். அவ்வூரார் அவனை அதோகதியி லழுத்தச் சமயம் பார்த்தேயிருப்பர். அவனை அவ்வூரார் யாவரும் "சீ! இவன் கெட்டான்; பொறாமைப் பேய்ப்பிடித்தவன்; அயல்வீடு வாழ்ந்தால் ஐந்து பட்டினிகிடக்கின்றான்; தானே வாழவேண்டும்; மற்றவ ரெல்லாம் தனக்குக் கீழ் அடங்கி யிருக்கவேண்டுமென்று கருதி, நம்மைக் கெடுக்கப்பார்க்கிறான்' தன் பேச்சுக்கு மாறுசொல்லு

வாரைத் தரையோடு தரையாக்கப் பார்க்கின்றான்; இவனை யெவ்வாறாகவாவது ஒழித்துவிடவேண்டும்'' என்றன்றோ வெண்ணுவர்? ஊராரோடு பகைகொள்ளுகின்றவன் தனக்கேயன்றித் தனது மக்கள் மனைவி முதலாயினோர்க்குந் துன்பத்தை யுண்டாக்கிக்கொள்ளுகின்றனன். ஊரார் சமயம்வந்தபோது அவனை மாத்திரமாவருத்துவர்; அவன் மக்கள் மனைவி முதலாயினாரையுமன்றோ வருத்துவர்? தான் வசிக்கும் ஊராருடன் பகைப்பவனுக்குப் பலவழியாலும் தீங்கேயுண்டாதலின், அவன் வமிசத்துடன் கெடுவானென்பதற்கு ஐயப்பாடென்பது அணுமாத்திரமாகவேனுமின்றாம். ஊராருடன் பகைப்பவனுக்குப் புகழுண்டாவதில்லையென்பதை நன்கு கவனித்தல் வேண்டும். புகழில்லாது வாழ்பவனுக்கும் வனமிருகத்திற்கும் வேற்றுமையாதாம்? ஆனல், வனமிருகத்தைக் குறிப்பிட்டிகழ்ந்து பேசுவாரொருவருமிலராவர்; இவனையோ ஊரார் அனைவரு மிகழுகின்றனர். இவ்வாற்றால் இவன் வனமிருகத்தினும் இழிந்தவனாகின்றான். தான் வசிக்கும் ஊராரோடு பகைகொண்டிருப்பவன், அவ்வூராருள் ஒவ்வொருவரையுங் கண்டவிடத்து இவர் என்ன செய்வாரோவென்று சந்தேகமுடையவனாக விருப்பான். சந்தேகமுடைய மனம் சஞ்சலத்திற்குறைவிடமாக விருத்தலின், அவன் எப்போதும் துக்கமுடையவனாகவேயிருப்பன். இவன் பேதைமையும் புல்லறிவாண்மையுமுடைமையால் பிறர்மீது கோபித்து, அவரை யிகழ்ந்து கெடுக்குமாறு முயலுகின்றான். இவன் செய்கையை யறிந்த ஊராரோ இவனை வம்சத்தோடு கெடுக்க முயலுகின்றனர். அதனால் இவனை இவன் வம்சத்துடன் சந்தர்ப்ப முண்டாயபோது அவ்வூரார் கெடுத்து விடுகின்றனர். இவ்வாறு கெட்ட குடும்பங்கள் பலவுளவென்பது யூகித்து நோக்குவோமாயின், விளங்குவதாம்.

ஊராரோடு பகைப்பவனுக்கு அவ்வூரார் உதவி செய்யாவிடினும், அவ்வூரிலேனும் அவ்வூர்க்கடுத்த ஊரிலேனும் பெரியாரிருக்கமாட்டாரா? அவர் இவனுக்குதவிசெய்யமாட்டாரா வென்று வினவுதல் கூடும்? அவர் அவனுக்கு உதவிசெய்வாராயின், அவன் பலவகைத் தீங்கினை ஊரார்க்கு விளைப்பானாகலின், அதுபற்றி அவர் அவனுக்கு

"தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது"

என்று பெரியாரருளியிருத்தலை யுட்கொண்டு, ஒருதவியுஞ் செய்வதில்லையாம். அதனாலவன் கதி அதோகதியேயாம்.

கோபம் மக்களுக்கு அவமானத்தையும் நாசத்தையு முண்டாக்குகின்றதென்றுணர்ந்து, கோபமின்றி வாழ்பவர் பகையின்றி வாழ்பவரென்று தெளிந்திருப்பவர் "குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்" என்னும் உலகநீதிக் குரியவராய் வாழ்வர்.

செல்வமில்லாதவன் தான் வசிக்கும் ஊராருடன் பகைகொள்ளுவதில்லையென்பது வெளிப்படையாமாகலின், செல்முடையவன் கோபமுடையவனாயிருப்பானாயின், அவன் ஊராருடன் பகைத்துத் தன் வம்சத்துடன் கெடுதற்குரியவனாகின்றான். "நான்குகை தட்டினால் ஓசை எழும்; ஒருகை தட்டினால் ஓசையெழாது" என்னும் பழமொழியை நன்குணர்ந்து நோக்கினால், ஊராருடன் பகைகொண்டிருப்பவன் எவ்வளவு சாமர்த்தியமுடையவனாயிருப்பினும், அவ்வூராரினின்றும் தப்பிப்பிழைப்பது முடியாதென்பது மாறுபாடின்றி விளங்குவதாம்.

"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் (ஒருவன் தான் வசிக்கும் ஊராருடன் பகைகொள்வானாயின், அவன் தன் வமிசத்துடன் கெடுவான்)" என்று கூறப்பட்டதாயினும், ஆற்றலாலோ தவத்தாலோ உயர்ந்தாரோடு பகைப்பவனும் தவறாது தன் வமிசத்துடன் கெடுவானென்றுணர்தற்பாலதாம். இராவணன் இராமனோடு பகைத்துத் தன் வமிசத்துடனழிந்ததையும், துரியோதனன் பாண்டவரோடு பகைத்துத் தன் வமிசத்துடனழிந்ததையும், இவைபோன்ற பிறவற்றையும் நாம் நூல்கள் வாயிலாக நன்குணர்வோமாயின், ஊராருடன் பகைத்தலேயன்றி உயர்ந்தாருடனும் பகைத்தல் கூடாதென்பது தெளிவாகவிளங்கும். ஊரார் பகையாவதற்குக் காரணம் கோபமேயன்றிப் பிறர் மனைவியரை விரும்புதலென்னுங் காமமுமாம். இவ்விரண்டுகுற்றமும் இல்வாழ்க்கை நிலையிலிருந் தொழுகுகின்றவனிடத்து இல்லாதிருக்குமாயின், அவன் தான் வசிக்கும் ஊராருடன் மேன்மேலும் பெருகவாழ்தற்குரியவனாய், இம்மையிற் புகழையும், மறுமையில் சுவர்க்கத்தையு மடைவானென்பது நிச்சயமாம்.

"இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு"

"தன்னுள்ளத்துப் பகைதோன்றியவிடத்து அதனை யெதிர்தலை யொழிதல் ஒருவனுக்குச் செல்வமாம்; அது செய்யாது அப்பகையினிடத்து மிகுதலை மேற்கொள்ளுவானுயின், கேடுந்தன்னிடத்து வருதலை மேற்கொள்ளுவான்"

என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற்பாலதாம்.

துருவ சரித்திரம்.

படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களுள் முதல் தொழிலான படைத்தற் றொழிலுக்குக் கர்த்தாவான பிரஹ்மதேவர் ஆதியில் தம் தொழிலை நடாத்தத் தொடங்கி, ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தார்; அப்பால் அவர்களைப் பரிபாலிக்கும் பொருட்டுத் தம் அம்சத்தினுல் மநு என்னும் ஒரு மகா நுபாவனை உண்டாக்கினுர். பின்னர் அந்தக் கமலாசனக் கடவுள் தமது மனைவியாகிய கலைமகளின் அம்சத்தினுல் அதிரூபவதியான ஒரு பெண்ணைப்படைத்தார். அந்தப் பெண்ணின் அதிசௌந்தரியத்தினுல் அவளுக்குச் சதரூபை என்னும் அழகிய பெயரைப்புனைந்தனர். மநுவும் சதரூபையும் அருமை பெருமையாக வளர்க்கப்பட்டு வந்தனர். அவர்கள் வதுவைக்குரிய பருவம் அடைந்தபொழுது பிரஹ்மதேவர் நியமனப்படி, மநு உத்தமியான சதரூபையை மணஞ்செய்து கொண்டனர்.

மநு ஸ்வயம்புவாகிய பிரஹமதேவரின் அம்சமானவராதலால், இவருக்கு ஸ்வாயம்புவ மநு என்னும் ஒரு பெயர் வழங்கலாயிற்று. மநுவும் சதரூபையும் அறநெறி சிறிதுந் தவருது இல்லறம் நடாத்திவந்தனர். மநு மகாகீர்த்திமான். இவர் மன்னுயிரைத் தம்முயிராகப் பாவித்துப் பரிபாலித்துவந்தனர். இவர்களிருவருக்கும் ப்ரியவ்ருதன், உத்தானபாதன் என்னும் இரண்டு புதல்வர்கள் உண்டாயினர்.

இவ்விருவருள் உத்தானபாதனே துருவன் என்னும் உத்தம புருஷனை ஈன்றவன். இனி அவனைப்பற்றிய வரலாற்றினை மாத்திரம் கவனிப்போம். உத்தானபாதன் ஸுநீதி, ஸுருசி என்னும் இரண்டு பெண்களை மணந்து கொண்டான். இவ்விரண்டு பெண்களும் இல்லிற்கிசைந்த இல்லாள்களாக விளங்கி

னர்; அழகிலும் குணத்திலும் நலத்திலும் அறிவிலும் நடத்தையிலும் இருவரும் ஒப்புயர்வற்றவராக இருந்தனர்.

இவ்வாறு இரண்டு மனைவியரும் எல்லாவிதத்திலும் ஒத்தவராக இருந்தும், உத்தானபாதன் இளையவளாகிய ஸுருசி என்பவளிடம் அதிக அன்புடையவனாக இருந்தான். அவ்வாறு ஒரு மனைவியிடத்து அன்புபாராட்டுவது நீதியல்லவென்பதை அவன் அறியாதவனாயினன். ஏனெனின், அவன்மகாநீதிமானாகியமநுவின் புதல்வனல்லவா? அங்ஙனமிருந்தும், அவன்மனம் பேதமடைந்தது அவனது வினைவசமென்று தான் கூறவேண்டும். உலகத்தில் இரண்டு பெண்களை மணந்தவர்களிற் பெரும்பாலார் இளையவளிடத்திலேயே மோகங்கொண்டு அவள் வசத்துப் பதுமையாக இருப்பதைக் காண்கின்றோமல்லவா? அந்த மோகம் இவனையும் பாதித்தது போலும்!

இவ்வாறான தன்மையிலிருக்கும் இவனுக்கு ஸுருசி யென்பாளிடம் ஒரு புத்திரனும் ஸுநீதி யென்பாளிடம் ஒரு புத்திரனும் பிறந்தனர். ஸுருசியிடம் பிறந்த புத்திரனுக்கு உத்தமன் என்றும் ஸுநீதியினிடம் பிறந்தவனுக்குத் துருவன் என்றும் சிறந்த பெயர் சூட்டி, உத்தானபாதன் அவர்களை வளர்த்து வந்தான். அவன் தன்மனைவி ஸுநீதியிடத்தில் வித்தியாசமான அன்பு பாராட்டியதுபோல் அவள் வயிற்றுதித்த துருவனிடத்திலும் வித்தியாசமான அன்பு பாராட்டத் தலைப்பட்டனன்.

இந்நிலைமையிலிருக்கும் இந்த உத்தானபாதன் ஒருநாள் சிங்காதனத்தின்மீது வீற்றிருக்குங்கால், உத்தமன் அங்குச்சென்று அவன்மடிமீதேறிஉட்கார்ந்தனன். உத்தானபாதன் அவ்வாறுவந்து தன்மடிமீது உட்கார்ந்த தன்மைந்தன் உத்தமனைக்கட்டித்தழுவி உச்சிமோந்து முத்தமிட்டுக் கொஞ்சிக்கொண்டிருந்தான். அச்சமயம் துருவனும் அங்கே சென்று உத்தமன் தந்தையின் மடிமீதிருக்கக்கண்டதும் அப்பா! அப்பா! இதோ நானும் வந்தேன் உங்களிடம்" என்று கூவிக்கொண்டு குதித்துக் குதித்து உத்தானபாதனிடம் ஓடினன். அப்பொழுது அங்கே ஸுருசி வந்து உத்தானபாதன் முன்னே நின்றுகொண் டிருந்தமையால், அவள் என்ன நினைப்பளோ வென்று கருதித் தன்னிடம் குதித்துக் குதித்து ஓடிவந்த குழந்தை துருவனை அவன் கவனியாதவன் போலிருந்துவிட்டான.

இதனால் துருவன் மனமுடைந்து அந்தச் சிங்காதனத்தினருகே முகவாட்டத்துடன் தந்தை முகத்தை நோக்கியவனாக நின்றான். பாலன் முகவாட்டமாக நிற்கும் கோலத்தை யாரே கண்டு சகிப்பவர்? அந்தோ! அவ்வாறு ஏங்கிநிற்கும் அந்தக் குழந்தைத் துருவனை ஸுருசி இறுமாப்போடு நோக்கி, "அடே! உன் எண்ணம் நிறைவேறாது; நீ செய்வது வீணான முயற்சி! என் வயிற்றினுதித்த மைந்தனாயின், நீ இந்தச் சிங்காதனத்தின் மீது ஏற நினைக்கலாம்; அவ்வாறில்லாமல் என் சக்களத்தி வயிற்றில் பிறந்த நீயோ இதில் அமரநினைப்பது? அது கிடைப்பது உனக்கு அரிதினும் அரிதென்று தெரிந்துகொள். நீ அவ்வாறு நினைத்து ஓடிவந்தது உன் மதியீனமேயாகும். நீ பாக்கியமற்ற ஸுநீதியின் வயிற்றிற் பிறந்தவனல்லவா? நீ இந்த உத்தமமான ஸ்தானத்திற்கு அருகனாகமாட்டாய். நீ அரசனுடைய புதல்வன்தான். ஆயினும் நீ இந்த ராஜைசுவரியத்திற்கு உரியவனன்று. நீ அரசருடைய மடிமீதிருக்கவும் அவர் உன்னைக்கொஞ்சி முத்தமிட்டுச் சீராட்டவும் விரும்பினால் பரமகருணாநிதியாகிய பரந்தாமனைக் குறித்து அருந்தவம்புரிந்து என் வயிற்றில் பிறக்கவேண்டும். அப்படியில்லையாயின், நீ கொண்ட எண்ணம் நிறைவேறாது" என்று சிறுவனாகிய துருவன் உடலும் உள்ளமும் பதறப்பதறப் பதைப்புடன் கூறினாள்.

தன் சிற்றன்னையின் வன்சொற்களெல்லாம் அவன் செவியில் அம்புபோல் பாய்ந்தமையின், துருவன் 'என்னே என்பிறவி! என்னே என்வாழ்வு! நன்று! நன்று!!" என்று கருதிப் பெரிதும் வருத்தமடைந்து பெருமூச்செறிந்து அங்கிருந்தவாறே தன் தந்தையாகிய பக்ஷபாதியின் முகத்தை நோக்கினான். அப்பொழுது துருவன் உதடுகள் படபடவென்று துடித்தன; கண்கள் இரண்டும் கோவைக்கனிபோல் சிவந்தன. ஆயினும் என்ன? இவற்றைக் கண்டும் உத்தானபாதன் சானாதகுருடன்போ லிருந்தான்? ஆகவே, துருவன் "சீ இவன் முகத்தில் அருள் என்பது அணுவளவும் காணோம். இவனிடம் இனி நிற்பது கூடாது" என்று மனத்தில் எண்ணி அங்கே ஒன்றும் பேசாமல் அதிகவருத்தத்துடன் தன் அன்னையின் மாளிகைக்குச் சென்றான். (வரும்.)

திரு அ. சுப்ரமணிய பாரதியார்.

பெண் கல்வி.

(ஒரு சம்பாஷணை)

ஸோமப்பிரபை:—அடி, அன்புள்ள தோழி, ஜானகி! இப்பொழுது என் அலுவல்களெல்லாம் முடிந்து விட்டன. பொழுதோ போகவில்லை; இனி என்ன செய்வது! கட்டம் ஆடலாமா? சொக்கட்டான் ஆடலாமா?

ஜானகி:—ஸோமப்பிரபா! நீ பொழுது போகவில்லையென்று சொல்வது வாஸ்தவந்தான். அதற்காகச் சொக்கட்டான் ஆடிக் காலத்தைக் கழிப்பது மிகவும் அறிவீனம்! அதனாலே தான் பெண்கள் கல்வி கற்கவேண்டுமென்று பெரியோர் கூறுகின்றனர். நீ கல்விகற்றிருந்தால் இப்படிப்பட்ட வேலையில்லாத காலங்களில் இராமாயணம், மஹாபாரதம், பாகவத முதலிய நல்ல கிரந்தங்களைப் படித்துக் காலத்தைப் போக்கலாம்; அப்படிச் செய்வதனால் புண்ணியமும் நல்நடத்தையும் உண்டாகும்.

ஸோமப்பிரபை:—தோழி! நான் அதிகமாய்ப் படிக்காவிடினும், கொஞ்சம் படித்திருக்கிறேன். ஆனால் பெண்களுக்கு வீட்டுவேலை தெரிந்தால் போதுமானது. கல்வியெதற்கு என்று சிலர் பரிஹாஸம் செய்ததால் இப்பொழுது கல்வி கற்பதை நிறுத்திவிட்டேன்.

ஜானகி:—அன்பார்ந்த தோழி! நீ சொல்வது மிகவும் விந்தையாயிருக்கின்றது. பெண்களுக்குப் படிக்கத்தெரியாவிட்டால், அவர்கள்தாம் இன்னின்னாருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்பது தெரியாமல் கஷ்டப்படுவார்கள். கல்வி கற்றிருந்தால் திரௌபதி, ருக்மணி முதலியவர்கள் தங்கள் நாயகரான பாண்டவர்கள் கிருஷ்ணன் முதலியவர்களிடத்து நடந்துகொண்டதையறிந்து அதன்படி ஒழுகுவார்கள் அதோ களிங்கஸேனையும் அவளது பாங்கி லலிதையும் வருகின்றனர். சற்று மௌனமாயிரு.

களிங்கஸேனையும் பாங்கியும் பிரவேசிக்கின்றார்கள்.

களிங்கஸேனை:—ஸோமப்பிரபா? உன்னைக் கண்டு நாலைந்து நாளாகின்றது. ஏதாவது விசேஷமுண்டா?

ஸோமப்பிரபை:—அம்மா! விசேஷமொன்றுமில்லை. தங்கள் வரவைக்கண்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

களிங்கஸேனை:—நீங்கள் எவ்விஷயத்தைப்பற்றியோ யோசிக்கிறீர்கள் போலிருக்கிறது. சொல்லக்கூடுமானால் அதனைச் சொல்லுங்கள்.

ஸோமப்பிரபை:—ஒன்றுமில்லை. பொழுது போகவில்லையே என்ன செய்யலாமென்று தோழி ஜானகியைக் கேட்டேன். அதற்கு அவள் இராமாயணம், மகாபாரத முதலிய நூல்களைப் படிக்கலாமென்று சொன்னாள். இதுதான் விஷயம்.

களிங்கஸேனை:—ஆ! ஆ! பெண்களுக்குப் படிப்பெதற்கு? பெண்கள் வீட்டிலேயே இருந்தால் அங்குமிங்கும் ஓடிச் சுபாவமான விளையாட்டு விளையாடுவார்கள். அதனால் பெண்களின் உடம்பு திடப்படும். இதன்றி வீட்டிலுள்ளவர்களின் நாக்கு ருசிக்குத் தக்கபடி சமையல் செய்ய யார் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுக்கிறார்கள்? விவாகமென்னும் ஒரு சம்பந்தத்தை விருத்திசெய்ய முக்கியமான பொறுமை, சமயோசிதமாய் நடந்துகொள்ளும்விதம் இவைகள், பள்ளிக்கூடத்தில் படிப்பதால் தெரிந்துவிடுமா? குழந்தைகளைத் தாயார் வளர்த்தல் முதலிய பற்பல குடும்ப காரியங்களை நேரில் பார்க்காமல் பள்ளிக்கூடங்களில் அறியக்கூடுமா? மேற்கண்ட காரணங்களால் பெண்கள் பள்ளிக்கூடத்தில் படிப்பதனால் பிரதிகூலமே யொழிய அநுகூலமொன்றுமில்லை. ஒரு பெண் வீட்டிலிருக்கும்பொழுது இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவான அநேக சங்கதிகளைத் தெரிந்துகொள்ளுகிறாள். இவை பள்ளிக்கூடங்களில் படிப்பதனால் தெரியவராது.

லலிதை:—(புன்னகையுடன்) தோழி, சற்றுநிறுத்து. பெண்களுக்குக் கல்வியதிகரித்தால் அது அவர்களைக் கெட்ட வழியிற் செலுத்தும், எழுதப்படிக்கத் தெரிந்தால் கணவனை மதியாது கர்வம் மேலிட்டுத் தம் புத்தியைத் தீயவழியிற் செலுத்துவார்கள். ஆனதால் பெண்கள் கற்பதேகூடாது.

ஸோமப்பிரபை:—(பரபரப்புடன்) தோழி! நீ சொல்வது முற்றும் பொருந்தாமலிருக்கிறது. பெண்கள் வீட்டிலேயேயிருந்தால் அங்குமிங்கும் ஓடி உடம்பு திடப்படும். பள்ளிக்கூடத்தில் தேகப்பயிற்சிக்கிடம் ஏதென்கிறாய்? இது பள்ளிக்கூடத்திலுமுண்டு. வீட்டில் இருந்தால் மனம்போனபடியெல்லாம் போய்ச் சண்டைசெய்துகொண்டு கால் கைகளை முறித்துக்கொள்ளுவார்

கள். பள்ளிக்கூடத்தில் அப்படியல்ல. வீட்டிலுள்ளவர் ருசிக்குத் தக்கபடி சமையல் செய்யப் பருவம் வந்தவுடன் அது பெண்களுக்குச் சுபாவமாய்த்தெரிந்துகொள்ளக்கூடியதாகையால், தானே தெரியவரும். மேலும் சில பள்ளிக்கூடங்களில் சமையல் செய்யும்விதம், தையல்வேலை, சித்திரக்கோலமிடுதல் முதலியவை கற்றுக்கொடுக்கப்படுகின்றன. படிப்பிருக்குமாயின் மனைவிகள் நாயகனிடம் நடந்துகொள்ளவேண்டிய விதமும், பாரத முதலியவற்றைப்படித்துத் திரௌபதி பாண்டவர்களிடம் நடந்துகொண்டதைக் கவனித்துத் தாமும் அப்படி நடப்பார்கள். பொறுமை முதலிய நற்குணங்கள் திருக்குறள், நாலடியார், பார்யா தருமம் முதலிய நீதி நூல்களைப் படிப்பதால் உண்டாகும். பிள்ளைகளை வளர்க்கும் விதமும் பாலர் பரிபாலனம், மானிடமர்மசாஸ்திரம் முதலிய வைத்தியக் கிரந்தங்களைப் படிப்பதால் செவ்வையாய் அறிந்து கொள்ளுதல்கூடும். அதனால் அநேக நன்மைகளுண்டு. மேற்கண்ட காரணங்களால் பெண்கள் அவசியம் கற்கவேண்டுமென்று தெரிகிறதல்லவா? ஒருபெண் வீட்டிலிருந்து குடும்ப வாழ்க்கைக்கு முக்கிய சங்கதிகளைத் தெரிந்துகொள்ளக்கூடுமென்றாலும் அவற்றைப் படித்தபின்பு எளிதாய்த் தெரிந்துகொள்ளலாம்.

ஜானகி:—தோழிகாள்! நான் சொல்வதைச் சற்றுக் கவனமாய்க் கேட்கவேண்டும். பெண்களுக்கு எழுதப்படிக்கத் தெரிந்தால் கர்வம் மேலிட்டு கெட்டவழியிற் புத்தியை செலுத்துவார்கள் என்று பேசுவது அசம்பாவிதமானதென்று நிரூபிக்க ஒரு திருஷ்டாந்தம் கூறுகின்றேன். அஃதென்னவென்றால், ஒருவனுக்குக் கால்கள் இருந்தால்தான் நடந்துபோகவும் குழிகளில் விழவும் கூடும். ஆகையால் அவ்வபாயம் வாராமல் கால்களை வெட்டிவிடுவதே நல்லது என்று சொல்வது எவ்வளவு நல்ல யுக்தியாயிருக்குமோ, அதுபோலவே தான் பெண்கள்படித்தால் கெட்டுப்போவார்கள் என்று கூறுவதுமாம். புருஷர்களுக்குள்ள குணாதிசயங்கள் ஸ்திரீகளிடமும் இருக்கின்றன. தமிழுலகத்திற்கு ஞானத்தாய்போன்ற ஔவை பெண்பாலன்றோ? புறநானூறில் பாடிப் புகழ்பெற்ற பெரியோருள் பலபோ பெண்களன்றோ? பூர்விகக்கவிச்சிரேஷ்டர்களில் ஒருவரான சாபோவென்பவர் பெண்ணன்றோ? தற்காலத்தில் இங்கிலாந்து பிரான்சு முதலிய ஐரோப்பிய நாடுகளில் தோன்றி ஆண் பெண் இரு பிரிவார்க்கும்

பெரு நன்மைவிளைத்த ஜேன் ஆஸ்டன், மாடம் ஆர்பிலே, ஜார்ஜ் எலியட், ஜார்ஜ் சாண்டு, மாடம் ஸ்டேல், முதலியோரெல்லாம் பெண்களன்றோ? இன்னுங் கல்வி விஷயத்தில் மட்டுமல்லாமல் இராஜ்யத்தையாளும் விஷயத்திலும் ஸ்திரீகள் ஆடவர்களுக்கு இளைத்தவர்களல்லர். இதனைச் சரித்திரவாயிலாக அறிந்துகொள்ளுகிறோம். எக்காலத்திலும் எந்நாட்டிலும் ஆண்ட எந்தச் சக்கிரவர்த்திக்கும் வல்லமையிலும் நீதியிலும் இணையற்றவரெனப் புகழோங்கிய (காதரைன்) கத்தரினுள் என்ற ருஷ்யச் சக்கிரவர்த்தினியும் பெண்ணன்றோ! அதே பெருமை படைத்துச் சிறிது காலத்திற்குமுன் இப்பாத கண்டத்தை யாண்டு காலஞ்சென்ற மஹாராணி விக்டோரியாவும் பெண்பாலன்றோ? இப்படியிருக்க ஆண்பாலருக்குள்ள அறிவு பெண்பாலார்க்கு இல்லையென்று யார் கூறக்கூடும்? கல்வியறிவில்லாதவர், கண்களில்லாதவர். இது பற்றியே திருவள்ளுவரும்

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று கூறியுள்ளார். கற்றோர் முகத்திலுள்ளது கண், மற்றோர் முகத்திலுள்ளது புண் என்பது பொருள். ஆனதால் யாவரும் கற்பது அவசியமென்பது பெறப்படுகின்றது. பரோடா சமஸ்தானத்தில் திவானாகவிளங்கி மந்திரித்துவத்தில் மகா நிபுணரென்று புகழ்பெற்றுக் காலஞ்சென்ற ஸர். டி. மாதவராவ் அவர்கள் பெண்கல்வி விஷயமாய்ச் சொல்வது என்னவெனில் "ஓர் ஆண்மகனைப் படிக்கவைக்கும் பிதா ஒருவனையே படிக்க வைக்கிறான். ஆனால் ஓர் பெண்ணைப் படிக்கவைக்கும் பிதாவோ ஒரு பெரிய குடும்பத்திற்கே கல்வி கற்பிக்கிறான்" என்பதே. ஆனதால் பெண்கள் கற்பது அத்தியாவசியமாம். சுபாவத்தால் புருஷனுக்கு எவ்வளவு புத்தி தீக்ஷண்ணியம் உண்டாகுமோ அவ்வளவு ஸ்திரீகளுக்கும் உண்டாகக்கூடும் என்பதற்கு அநேக உதாரணங்களிருக்கின்றன. ரேடியம் (Radium) என்னும் அருமையான உலோகத்தைக் கண்டுபிடித்தது ஒரு பெண்ணல்லவா? கவனசக்தியிலும் பரௌனிங், ஹீமான்ஸ் முதலியவர்கள் பெருமையை அடைந்திருக்கிறார்கள். அறிவில்லாமையால் ஆர்க்ரைட் (Arkwright) என்பவரது மனைவி அவரது அருமையான யந்திரங்களை நாசமாக்கினளென்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

பிர்ம்மஸ்ரீ முத்துஸாமி அய்யரவர்களின் விஷய அட்டவணையைப் பார்த்தால் பெண்கள் குடும்பப் பாதுகாப்புக்காகச் சிருஷ்டிக்கப் பட்டவர்களென்றும் அச்குடும்பப் பாதுகாப்புக்கு விஷயஞானம் அவசியமென்றும் அவர் எண்ணினரென்று தெரிகின்றது. நற்குணம் அமைந்த மனைவியில்லாத மனை பாழ்மனையென்று மஹா பாரதத்திலும் இல்லறத்திற்குரிய குணம் மனையாளிடத்திலிலையேல் அவ்வில்வாழ்க்கை எவ்வளவு சிறப்புடைத்தாயினும் பயனில்லை எனத் திருக்குறளிலும் கூறியிருப்பது காண்க. பெண்கள் நன்குபடித்திருந்தால் மீனுக்ஷி வீட்டில் தீபாவளிக்கு எவ்வளவு பணங்கொடுத்தார்கள்? காமாக்ஷி வீட்டில் ஆடிக்கு எவ்வளவு பணங்கொடுத்தார்கள்? சுந்தரிக்கு அந்தப்புடவை வாங்கியிருக்கிறது. அவள் பெனரிஸ் ரவிக்கைத் துண்டு வாங்கியிருக்கிருள் இவள் ரவைக்கம்மல் வாங்கியிருக்கிருள். நாமும் அதுமாதிரி நமது பெண்ணுக்குக் கொடுக்கவேண்டும். நாமும் அதுமாதிரி வாங்கவேண்டும் என்று வீணுய் வம்புபேசி வரதக்ஷிணைப் பிசாசால் ஆவேசங்கொண்டு, தன்னிலைமை தெரியாமல் இருப்பதை அழித்துவிட்டு ஒருபொழுதும் காவடியாய்த் திரியமாட்டார்கள். நன்ருய்க் கற்றுணர்ந்த விக்டோரியா என்னும் நமது சக்ரவர்த்தினியார் இவ்வுலகத்தில் ஐந்திலொருபங்கை ஆசாளத் திறமை கொண்டிருந்தாரென்ருல் நமது நாட்டில் சில ஸாமான்னிய ஜனங்கள் நினைக்கிறபடி பெண்களுக்கு ஸ்வயபுத்தி கிடையாதென்னும் எண்ணம் எவ்வளவு பிசகு. பெண்களுக்குப் படிப்பு விருத்தி விஷயத்தில் காருண்ய கவர்ன்மெண்டார் அதிகச் செலவு செய்திருக்கிருர்கள். ஆகையால் பெண்கள் கற்பது அவசியம்.

களிங்கஸேனை:—பள்ளிக்கூடத்தில் படிப்பதால் ஆசாரக் குறைவும் ஜாதிக்கட்டுப்பாடும் உண்டாகுமன்ருே?

ஸோமப்பிரபை:—அப்படியானுல் கன்னிகைப் பருவம் வரை பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டுப் பின்பு தன்தந்தை முதலியவர்களிடத்தில் படிக்கலாம்.

லலிதை:—அப்படி நம்முன்னேர்களில் யாராவது படித்திருக்கிருர்களா?

ஜானகி:—ஔவை, ஸீதை, ஸாவித்திரி, தமயந்தி, சகுந்தலை, திரௌபதி முதலியவர் படித்திருந்தார்களென்று அவர்கள்

சரித்திரத்தினாலேயே தெரிகிறதல்லவா? அன்றியும் நமது சாஸ்திரங்களில் பெண்கள் கற்கக்கூடாதென்று எங்கேயாவது கூறியிருக்கின்றதா?

களிங்கஸேனை:—தோழிகாள்? நாங்கள் படிக்காமையால் உங்களையும் படிக்காமல் செய்துவிடவேண்டுமென்றே இதுகாறும் வீண்வாதம் செய்தோம். இது அறியாமையால் உண்டாகியதேயன்றி வேறல்ல. நான் செய்த பிசகிற்கு மன்னித்து என் தோழி லலிதையையும் மன்னிக்கவேண்டும். நேரமாய்விட்டபடியால் நாங்கள் போய்வருகிறோம்.

(களிங்கஸேனையும் லலிதையும் போகின்றனர்.)

ஸோமப்பிரபை:—(பெருமூச்சுடன்) அடி! அன்பார்ந்த ஜானகி! பெண்களுக்குக் கல்வி அவசியமென்று நன்கு அறிந்துகொண்டேன். இனி நல்ல நூல்களைப்படித்து, அப்படிப்பை விருத்திசெய்து கொள்ளுகிறேன். நீயும் வம்புபேசிக்கொண்டும் சண்டை செய்துகொண்டும் காலத்தைக் கழிக்காமல் நல்ல புஸ்தகங்களைப் படித்து கல்வியை அபிவிருத்தி செய்துகொள்.

ஜானகி:—(சந்தோஷத்துடன்) நீ சொல்வதை ஒருபொழுதும் மறக்கமாட்டேன். கதிரவன் மேற்றிசையை அடைந்துவிட்டான். ஆனதால் கடவுளைத் துதிசெய்யக் கோவிலுக்குப் போவோம். (இருவரும் போகின்றனர்.)

Pandit M. M. Narayanasamy Aiyar
Mudikondan.

தன் மருமகளின் கோபத்தைமாற்றிய ஒரு மாமனார்.

ஆவடியென்னுமூரில் சிலகாலத்திற்குமுன்னே அரங்கநாத முதலியரென்பார் ஒருவரிருந்தார்; அவர் வாஸ்தவத்தில் பொறுமைக் குறைவிடமாயிருப்பவர்; அவர்க்குப் பாலாமணியென்றொரு புத்திரியிருந்தாள். அவள் பிறப்பிலேயே அடங்காப்பிடாரி. எப்போதும் அவள் முகத்தில் கோபமே குடிகொண்டிருக்கும். அவள் கணவனாகிய சுகுணசுந்தர முதலியாரென்பவன் சற்று முன்கோபக்காரன்; ஆனால் அவன் தன்னோடு எதிர்த்துப் பேசுவா

ரில்லாத விடத்துக் காதைப்பிடித்தாட்டினாலும் சும்மாயிருப்பான். அடங்காப்பிடாரியும் முன்கோபக்காரனுமாகிய இவர்களது வாழ்க்கை விவாகமானது முதற்கொண்டு நாய் பூனைகளின் வாழ்க்கை போலிருந்தது. இவர்கள் சண்டைபோட்டுக்கொள்ளாத நாளே கிடையாது. அவன் சற்றுக்கோபத்தோடு அடியென்று கூப்பிட்டாலே போதும்; அவள் சண்டைக்காரம்பித்து, அவன் மானத்தை வாங்கிவிடுவாள். இதனால் இவர்களை அண்டை-அயல் வீட்டுக்காரர் ஒவ்வொருநாளும் சமாதானஞ் செய்யவேண்டியவராயிருந்தனர். இவள் தன் கணவனோடு இடைவிடாது சண்டைபோட்டுக்கொண்டு வந்தாலும், தன் கற்பு விஷயத்தில் தீண்டா நெருப்புப்போலவிருந்தனள். இதனால் அவன் அவளைவிட்டுப் பிரிவதற்கு மனமில்லாதவனாயிருந்தான். இவ்வாறிருக்குந்நாளில் ஒருநாள் அரங்கநாத முதலியார் தம் புத்திரியைக் காணவந்து, போஜனஞ் செய்தபிறகு அம்மா! நீ உன் புருஷனோடு சண்டைபோடாதிருக்கின்றாயா? என்று கேட்டார். அதற்கு அவள் என் தலைவிதியைப்பற்றி யென்னவென்று சொல்லுவது? வாய்ச்சண்டையும் கைச்சண்டையுமில்லாத நாளே கிடையாது. அவர் ஆவென்பதற்கு முன்னே ஊவென்று சண்டைக்காரம்பித்துவிடுகின்றார் என்றாள். அதற்கு அம்முதலியார் நீ பதில் பேசாதிருந்தால் சண்டையில்லாதிருக்கலாமே யென்றுகேட்டார். அதற்கு அவள் அது முடியாது; அவர் திட்டினால் நான் திட்டாமலிருக்க முடியுமோ? அவரடித்தால் நான் திருப்பியவரை அடிக்காமலிருக்க முடியுமோ என்றாள். இவளது அடங்காப்பிடாரித் தன்மையை யவர் முன்னரே அறிந்திருப்பவராதலால், சிறிது நேரம் ஆலோசித்து, தம் புத்திரியை நோக்கி, பாலாமணி! நான் இப்போது ஒருமந்திரங் கற்றிருக்கின்றேன், அது மிகுமேலானமகிமையுடையது; ஒரு செம்பு ஜலங்கொண்டுவா; அதனை மந்திரஞ் செய்து தருகின்றேன். அந்த ஜலத்தை நீ நான் கூறியவாறு உபயோகித்து வந்தால், சண்டையே யில்லாதுபோம் என்றார். அதுகேட்டு அவள் மிகு பரபரப்பாகக் கர்ப்பூரம், ஊதுவர்த்தி, தாம்பூலம், தேங்காய் முதலியவற்றோடு, சுத்தமாக ஒரு செம்பு ஜலங்கொண்டுவந்து, தனது தந்தையாரிடத்து வைத்தனள். அவர் எழுந்து கால்முதலியவற்றை ஜலத்தால் சுத்தி செய்து கொண்டு வந்து, சுத்தமாய விடத்திலுட்கார்ந்து, மாந்திரீகர் செய்வதுபோல நடித்து, அந்த ஜலத்தை ஒரு புட்டியில் வார்

த்து, தமது புத்திரியினிடத்திற் கொடுத்து அம்மா! இந்த ஜலத்தைச் சுத்தமானவிடத்தில் வைத்திருந்து, உன் புருஷன் வந்தபோது, வாய்நிறைய ஊற்றிக்கொண்டு, அவன் போனபிறகு உமிழ்ந்துவிடவேண்டும்; இவ்வாறு செய்துவந்தால், சண்டையேயில்லாது போய்விடுமென்றார். பாலாமணி அவர் வாக்கில் நம்பிக்கை வைத்து அவர் கூறியபடியே செய்துவந்தாள். சுகுண சுந்தரன் தானென்ன பேசினாலும் அவள் எதிர்த்துப் பேசாதிருந்தலைகான்கைந்து நாள் பார்த்து, என்னபேசினாலும் எதிர்த்து ஒன்றும் பேசாதிருப்பவளோடு ஏன் வீணே சண்டைபோடவேண்டுமென்றெண்ணி அவளிடத்தில் மிக அன்பாயிருந்தான். பாலாமணி தன் புருஷன் சண்டைபோடுவதைவிட்டு, மிகு அன்பாயிருப்பதைப் பார்த்து, நமது தகப்பனார் செய்த மந்திரம் நல்ல மந்திரம்; இன்னும் மந்திர ஜலத்தைப் பெறவேண்டுமென்றெண்ணி, அவரை வருமாறு செய்து, அப்பா! நீங்கள் செய்த மந்திரம் நல்ல மந்திரம்; இன்னும் அவ்வாறு மந்திரஜலம் தரவேண்டுமென்று கூறித் தாங்கள் சண்டையில்லாது சந்தோஷமாக விருப்பதையுங் கூறினாள். முதலியார் தம்மகளுக்குப் பலவாறு புத்தி சொல்லி எதிர்த்துப் பேசாதிருந்தால் சண்டையே வாராதென்று கூறிப் போய்விட்டார். பின் அவ்விருவரும் சமாதானமாகவே வாழ்ந்து வந்தனர். இக்கதையினால், மனைவியர் தம் கணவரோடு எதிர்த்துப் பேசாதிருந்தால், எவ்வகையாலும் சுகமாக வாழலாமென்பது விளங்கும்.

கிண்டர்கார்ட்டன் முறையின் முக்கிய தத்துவங்கள்.

(A few essentials of kindergarten)

I விஷயங்களின் பரஸ்பர சம்பந்தம். (Correlation)

(a) இயற்கை விசாரம். (Nature study)

(b) சித்திரம் எழுதல். (Drawing)

(c) களிமண்ணால் உருவமைத்தல். (Clay-modelling)

(d) பிரஷ்ஷினால் சித்திரமெழுதல். (Brush work)

(e) கதை சொல்லல். (Story telling)

(f) பாட்டுப் பாடுதல். (Singing)

II விளையாட்டு. (Games)

III தோட்டமும் சிறு பிராணிகளை வளர்த்தலும்.

மேற்கூறிய இயற்கை விசாரம்முதல் விளையாட்டு ஈறாக வுள்ள எல்லாத் தத்துவங்களும் சிறுவர்களின் மனோவிசாலத்திற்காகவும், உற்சாகத்திற்காகவும் நாம் இக்கிண்டர்கார்ட்டன் முறையில் உபயோகிப்பது அவற்றின் பரஸ்பர சம்பந்தத்தினாலேயே. "பரஸ்பரஸம்பந்தம்" என்றால் ஒரு விஷயத்திற்கும் இன்னொரு விஷயத்திற்கும் உள்ள சம்பந்தமே. உதாரணமாக, பக்ஷிகளுக்கும் அவை கூடுகட்டுவதற்கும் வசிப்பதற்கும் தகுந்த மரங்களுக்கும் சம்பந்தமுண்டு. மிருகங்களுக்கும் தாவரங்களுக்கும் சம்பந்தமுண்டு. தாவரங்களுக்கும் மழைக்கும், சூரியனுக்கும் பூமிக்கும், இப்படியே இவ்வுலகத்திலிருக்கும் ஒவ்வொரு சிருஷ்டிப் பொருளுக்கும் பரஸ்பர சம்பந்தமுண்டு. சிருஷ்டிப் பொருள்களில் இவ்வித சம்பந்தமிருப்பதால் (இப்பொருள்களைப் பற்றிய விஷயங்களை நாம் பிரத்தியக்ஷமா யறிந்தபோது அவற்றின் ஞாபகம் நம்மனதில் நிலைத்திருக்கின்றதால்) இவற்றின் நினைப்பிலும் சம்பந்தமுண்டு. உதாரணமாக ஒருவன் எலுமிச்சம்பழத்தின் சுவை புளிப்பென்று அறிந்தபோது இதற்குமுன் அனுபவித்து "புளிப்பு" என்று அறிந்த புளியம்பழத்தின் ஞாபகம் அவனுக்கு வருகின்றது. இதுதான் பரஸ்பரம் சம்பந்தப்பட்ட நினைப்பு. விஷயங்களுக்குப் பரஸ்பர சம்பந்தத் தன்மையில்லாவிடில் அவற்றைப்பற்றி ஒருவனுடைய மனதில் அழுந்தியிருக்கும் ஞாபகங்கள் வருவதற்குக் காரணமேயில்லை. இங்ஙனம் ஈச்வரசிருஷ்டியில் ஒவ்வொருபொருளும்சங்கிலிபோல்தொடர்ச்சியாயிருப்பதால் அவற்றைப்பற்றிய விஷயங்களைப் போதிக்கையில் நாமும் தொடர்ச்சியாய்ப் போதிக்கவேண்டியது மிகவும் அவசியமல்லவா? இங்ஙனம் எலுமிச்சம் பழத்தின் உருசியைப்பற்றிப் போதிக்கையில் புளியம்பழத்தின் உருசியையும் மற்ற புளிப்பான பொருள்களின் உருசியையும் சம்பந்தப்படுத்திப்போதிக்காது விடுத்து வேறு விஷயத்தைப் போதிக்கப்புகின் சிறுவர்களின் மனதில் இயற்கையாகவே சம்பந்தப்பட்டிருக்கும் புளியம்பழத்தின் உருசி அவர்களுக்கு இயல்பாகவே ஞாபகம் வந்து அதைப் பற்றியவர்கள் யோசித்துக்கொண்டிருப்பார்களே யொழிய நாம் கற்பிக்கும் (வேறு) விஷயத்தைக் கவனிக்க அவர்களுக்கு இயலாது. ஆகவே நாம் என்ன சொல்லியும் பயன்படாது.

இதனால் அவர்களைப் பாடம் கவனிக்கவில்லை யென்று தண்டிக்க நேரிடும் ஏன் சிறுவர்கள் கவனிக்கவில்லை? யென்று சற்று யோசித்தால் நாம் அவர்களின் மனதிற்கு இயல்பாயுள்ள பரஸ்பர ஸம்பந்த விஷயங்களைக் கூறாது விடுத்ததே என்று புலப்படும். மேலும் "தெரிந்ததைக்கொண்டு தெரியாததைப் போதித்தல்," என்னும் உத்தமமான முறைப்படி பார்க்கினும் ஒன்றுக்கொன்று பரஸ்பர சம்பந்தமான விஷயங்களைப் போதிக்கும் முறையாகத் தான் முடிகிறது. எங்ஙனமெனின், சாகபக்ஷணியான பசுவின் ஆகாரத்திற்குத் தகுந்தவாறு அதன் தேகம் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறதென்று பிள்ளைகளுக்குப் போதித்தவுடன் அதே ஆகாரத்தையுடைய ஆட்டின் தேக அமைப்பைப்பற்றிப் போதிக்கிறோம். இதுதான் முற்கூறிய உத்தமமான முறையாம். இம் முறைப்படி போதிப்பதிலும் ஆடு மாடுகளுக்குப் பொதுவாயுள்ள சாகபக்ஷணத் தன்மையே இவ்விரண்டிற்குமுள்ள பரஸ்பர ஸம்பந்தமாதலால் சம்பந்தப்படுத்திப் போதிக்கும் முறையாகத்தான் முடிகிறது. ஆகவே விஷயங்களைச் சம்பந்தப்படுத்திப் போதிப்பதே சிறுவர்களின் புத்தி ஸூக்ஷ்மத்திற்கும் மனோ விசாலத்திற்கும் ஏற்ற முடிவானமுறை என்று ஏற்படுகிறது. ஆதலால் உபாத்தியாயர்களாகிய நாம் இம்முறைப்படி போதிப்பது அவசியம். இம்முறையில் ஒரு பொது விஷயத்தை யெடுத்துக் கொண்டு அதற்குப் பல விஷயங்களையும் சம்பந்தப்படுத்தலாம்.

உதாரணம்:—பொது விஷயம். எருது; இதன் ஆகார சம்பந்தமாய், புல் வைக்கோல் அசை போடும் சம்பந்தமாய்; ஆடு மான் ஒட்டகம் மனிதனுக்கு வண்டியிழுக்க உதவும் சம்பந்தமாய்; குதிரை வண்டி முதலிய பல விஷயங்களைப் போதிக்கலாம். ஆனால் இங்ஙனம் சம்பந்தப்படுத்திப் போதிப்பதில் நாம் எடுத்துக்கொண்ட பொதுவிஷயத்திற்குப் போதிக்கும் இதர விஷயங்கள் எவ்வளவு சம்பந்தப்பட்டிருக்கின்றனவோ அவ்வளவு தான் போதிக்கலாம். அப்போதைக்கப்போது பொது விஷயத்தை ஞாபகப்படுத்திக்கொண்டே யிருப்பது நலம். இதுவரையில் ஒரு பொதுவிஷயத்திற்குச் சம்பந்தமாய் இதர பலவிஷயங்களைப் போதிக்கும் விதம் கூறப்பட்டது. இனி ஒரு விஷயத்தையே பல பாடங்களுக்குச் சம்பந்தப்படுத்திப் போதிக்கும் விதத்தை ஆராய்வாம். லட்டு, ஜிலேபி, ஹல்வா, பூந்தி, முதலிய பக்ஷ

ணங்களின் பொதுத்தன்மை தித்திப்பாயிருந்தபோதிலும் அந்தத் தித்திப்பான சர்க்கரையைக்கொண்டு பற்பலவிதங்களாகச் செய்யப்பட்டனபோல் ஒரே விஷயத்தைப் பலவிதங்களாகவும் போதிக்கலாம். உதாரணமாக:—

இயற்கை விசாரம். தவளையின் வடிவம், நிறம், அங்க அமைப்பு, மாறுதல்கள், வசிக்குமிடம் முதலியன.

சம்பந்தப்படுத்திப் போதிக்கும் பாடங்கள். போதிக்கக்கூடிய விஷயங்கள்.

1 சித்திரம் வரைதல்: தவளையின் வடிவம், அங்க அமைப்பு, மாறுதல்களின் விவரிப்பு முதலியன.

2 களிமண்ணால் அமைத்தல் Do

3 பிரஷ் வேலை Do—நிறம்.

4 கதை சொல்லுதல். தவளையின் மாறுதல்கள் குணங்கள் முதலியவற்றின் உதாரணம்.

5 பாட்டு. தவளையின் சரித்திரத்தைப் பற்றியது.

6 விளையாட்டு: தவளையைப்போல் தத்தித்தத்திக்குதித்தல்.

இங்ஙனம் "தவளை" யென்னும் ஒரு விஷயத்தையே இயற்கை விசாரம், சித்திரம் வரைதல், களிமண் வேலை, பிரஷ்வேலை, கதைசொல்லுதல், பாட்டு, விளையாட்டு முதலிய பலபாடங்களின் மூலமாய்ப் போதிக்கலாம். இப்படிப் போதிப்பதால் விஷயங்கள் பிள்ளைகளின் மனதில் நன்றாய்ப்பதியும். ஆகவே இங்ஙனம்போதிக்க இயற்கை விசாரம், சித்திரம் முதலிய பாடங்களைப்பற்றி நாம் சற்று அறிந்திருப்பது அத்தியாவசியமாதலால் அவைகளைப்பற்றிச் சற்று கவனிப்போம்.

(a) (இயற்கை விசாரம்.) (Nature Study)—இவ்வுலகத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன், மிருகங்கள், பக்ஷிகள், ஊர்ந்துபோகும் ஜெந்துக்கள், பூச்சிகள், புழுக்கள், மீன்கள் முதலிய எல்லா ஜெந்துக்களைட்பற்றியும், புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலிய தாவரங்களைப்பற்றியும், பூமிக்குள் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படும் உலோகங்கள் நிலக்கரி முதலிய தாதுப்பொருள்களைப்பற்றியும் ஜலம், காற்று, சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலியவைகளைப்பற்றியும், மழை, பனி முதலிய கால வேறுபாடுகளைப்பற்றியும், இந்திரதனுசு, கிரகணங்கள், எரிநக்ஷத்திரங்கள், பகலிரவுகள், அமாவாசை, பௌர்ணமி முதலிய ஆகாயத் தோற்றங்களைப்பற்றியும் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தோ அல்லது தகுந்த உபகரணங்களால் உதாகரிக்கப்பட்டோ சந்தேகமற அறிவதே இயற்கை விசாரமெனப்படும். இவ்விசாரம் பிள்

ளைகளின் அறிவிற்குத் தக்கபடி ஸ்தூலமாகவோ ஸூக்ஷ்மமாக வோ செய்யப்படும்.

பொதுவாய் எவ்வெவ் விஷயங்களைக் கற்பிக்கலாமென்று யோசிப்போம்.

ஜெந்துக்கள் வசிக்குமிடம்; இடத்திற்குத்தக்க ஆகாரம், ஆகாரத்திற்குத் தகுந்த தேக அமைப்பு, சுபாவகுணங்கள், சலனம் (நடத்தல், பறத்தல், நீந்துதல், ஊருதல், குதித்தல் முதலியன) உபயோகம் தவளை, பட்டுப்பூச்சி முதலியவற்றின் மாறுதல்களைப்போன்ற இதர ஆச்சரியமான விஷயங்கள் முதலியன.

தாவரங்கள். பாகங்கள் (வேர், அடிமரம், குலைகள், இலைகள், புஷ்பங்கள், காய்கள், பழங்கள், விதைகள்) எங்கே வளரும்? எப்படிப் பயிரிடுவது? உபயோகம் முதலியன.

தாதுக்கள். எங்கே, எப்படி, எதனுடன் அகப்படுகின்றன? பூமியில் எவ்வளவு ஆழத்தில் வெட்டி யெடுக்கப்படுகின்றன? தன்மைகள்; உபயோகம் முதலியன.

ஆகாயத்தோற்றங்கள். எப்படி உண்டாகின்றன? எப்போது உண்டாகின்றன?

காலவேறுபாடுகள். எப்போது உண்டாகின்றன? ஏன் உண்டாகவேண்டும்? உபயோகம் முதலியன.

குறிப்பு. இயற்கைப்பாடங்களாகப் போதிக்கப்படும் விஷயங்கள் பிள்ளைகள் அடிக்கடி பார்க்கக்கூடிய ஜெந்துக்களாயும், மரஞ் செடிகளாயும் தோற்றங்களாயு மிருப்பது அவசியம். இயற்கைப் பாடத்திற்கும் பொருட் பாடத்திற்கு முள்ள வித்தியாசத்தை உபாத்தியாயர்கள் நன்றாய் அறிந்திருப்பது நலம். இயற்கைப்பாடமென்பது இயற்கைப்பொருளையே பிள்ளைகள் தங்கள் இந்திரியங்களால் பார்த்து, தொட்டு, முகர்ந்து, ருசித்து, கேட்டு, ஊகித்து அறிதல். ஜெந்துக்களின் சுபாவங்களை ஒரு நாளில் அறிய முடியாதாகையால் அவற்றை வளர்த்து ஆகாரமெடுத்துக்கொள்ளும் விதத்தையும் அவற்றின் குணங்களையும், இன்னும் மற்ற விஷயங்களையும் அறிதல், மரஞ் செடிகளைத் தோட்டத்தில் பயிரிட்டு அவற்றின் வளர்ச்சியையும், புஷ்பிக்கும் காலம், பருவம் முதலியவைகளையும் அறிதல்.

பொருட்பாடமென்பது செயற்கைப் பொருள்களைப்பற்றியோ அல்லது இயற்கைப் பொருள்களைப்பற்றியோ படங்கள் சித்திரங்கள், களிமண்ணால் செய்த உருவங்கள் முதலிய உபகரணங்களைக் கொண்டு அவற்றைப்பற்றிய விஷயங்களைப் போதிப்பது.

பரஸ்பர ஸம்பந்த பாடம்.

A Correlated Scheme.

	சம்பந்தமான பாடங்கள்.	2-ம் வகுப்பு	முதல் வகுப்பு	பாலர் வகுப்பு
	ஆதாரப்பாடம் (Central idea) கதை.			
1	கதை சொல்லல்.	பழக்காரனும் ஒரு பையனும்.		
2	இயற்கைப் பாடம்.	பல பழங்கள் அவற்றின் அமைப்பு.	மாம் பழம் விளாம்பழம் இவற்றின்பேதம்.	கிச்சிலிப்பழம் கொய்யாப்பழம் இவற்றின் பேதம்.
3	சித்திரம்	பல பழங்கள்	மாம்பழம்	கிச்சிலிப் பழம்
4	களிமண் வேலை	ஷை	ஷை	ஷை
5	பொது அறிவு.			
6	பிரஷ் வேலை	மாதுளை. மா.	மாம்பழம் கிச்சிலிப் பழம்.	
7	கதை படித்தல்	பழக்காரனும்	பையனும் என்னுங் கதையை நடித்தல்	
8	பாட்டு அல்லது செய்யுள்	ஷை	கதைக்கிசைந்த பாட்டு	

விடியற்காலம், பகல் இரவு, காலை, மாலை முதலிய தினத்தின் பிரிவுகளையும், பாலியம், விருத்தாப்பியம் முதலிய பருவங்களையும் மெய் வாய், கண், செவி முதலிய ஐம்புலன்கள் விருத்தாப்பிய காலத்தில் சரியாய் வேலைசெய்யச் சக்தியற்றவைகளாகின்றனவென்பதையும் போதிக்கலாம்.

• கதை:—பழக்காரனும் ஒரு பையனும். ஒருகிராமத்தில் ஒருகிழவன் இருந்தான். அவனுக்கு ஒருபெரிய பழத்தோட்டம்இருந்தது. அதில் பழுக்கிற பழங்களை அடுத்த பட்டணத்திற்குக் கொண்டு

போய் விற்றுவருவது வழக்கம். ஒருநாள் விடியற்காலத்தில் கூடைநிறையப் பழங்களை யெடுத்துக்கொண்டு போகும்போது அக்கூடையிலிருந்து இரண்டு பழங்கள் கீழேவிழுந்தன. விடியற் காலத்தில் சற்று இருட்டாயிருந்ததாலும் கிழவனுதலால் காது கேளாததாலும் அவனுக்குப் பழங்கள் விழுந்தது தெரியவில்லை. ஆதலால் அவன் போய்க்கொண்டேயிருந்தான். அதை ஒரு வீட்டின் அறையில் வாசித்துக்கொண்டிருந்த ஒரு பையன் சாளரத்தின்வழியாய்ப் பழங்கள் கீழேவிழுந்ததைச்சப்தத்தினுல்அறிந்து அப்பழங்களைப் பொறுக்கி அக்கிழவனை யழைத்து அவனிடத்திற்கொடுத்தான். பழக்காரக்கிழவன் அப்பையனுடைய யோக்கியதைக்கு மெச்சி அப்பழங்களை அவனுக்கே இனுமாய்க் கொடுத்து விட்டான்.

அக்கிழவன் கூடையில் கொண்டுபோன பழங்களாவன:— மாம்பழம், கொய்யாப்பழம், பாதளம்பழம், கிச்சிலிப்பழம், விளாம்பழம், முந்திரிப்பழம் சீத்தாப்பழம் முதலியன.

NATURE STUDY.

இயற்கைப் பாடம்.

பல பழங்கள்—அவற்றின் அமைப்பு முதலியன.

Model Notes of Lesson.

மாதிரிப்பாடக் குறிப்பு.

உபாத்தியாயருக்குக் குறிப்பு.—ஒரு புஷ்பத்திலுள்ள சினைப் பையானது மகரந்தப்பொடியினுல் பருத்து முதிர்ந்து பழமாகிறது. நெல், கேழ்வரகு அவரைக்காய், கலியாண முருங்கைக் காய், முதலியன யாவும் பழங்களே. பழங்கள் இருவகை (1) தசைக்கனி (2) வறட்கனி (3) போலிக்கனி. விளாம், வில்வம்,தென்னை,கத்திரி,மா,வாழை முதலியன தசைக்கனியாம். இவற்றுள்,

(1) விளாம், வில்வம் முதலியன வெளியோட்டுத் தசைக்கனி. மா, தென்னை முதலியன உள்ளோட்டுத்தசைக்கனி. கத்திரி வாழை முதலியன ஓடற்ற தசைக்கனியாம்.

(2) அவரை, கலியாணமுருங்கைமுதலியனவறட்கனிகளாம்.

(8) முந்திரிப்பழம், பேரிக்காய் முதலியன போலிக்கனிகளாம்.

பழங்கள்.

உபகரணங்கள்:—பற்பல விதமான பழங்கள்—ஆப்பிள், கிச்சிலி, மா, விளாம், மாதுளை, கொய்யா, தென்னை, முந்திரிப்பழம், சீத்தாப்பழம், கத்திரி முதலியன.

விஷயம்	முறை	பரஸ்பரம் சம்பந்தம். திருஷ்டாந்தங்கள் முதலியன.
(1) பீடிகை	பற்பலவிதமான பழங்களைப் பற்றிச் சம்பாஷிப்பது.	
(2) பாடம்: பழமென்பது என்ன? புஷ்பத்தின் ஒருபாகம். (அண்டாசயம். ovary) பருத்து முற்றினால் அதைப் பழமென்று சொல்லுகிறோம்.	ஒரு கத்தரிச் செடியின் பூவைக் காட்டி அதன் பாகங்களைப் போதித்து கர்ப்ப கேஸரத்தின் அடியிலுள்ள கெர்ப்பப் பெட்டி பருத்து வருவதைப் பல நிலைகளாக (stages)க்காட்டி அந்த கர்ப்பப் பெட்டியின் மலர்ச்சி (developement) தான் பழமென்று வருவிக்க.	கத்திரிப் பிஞ்சு புஷ்பம் காய், காய் நுனியில்பூ ஒட்டிக் கொண்டிருப்பது முதலியவற்றைப் பிள்ளைகளுக்குக் காட்டுவது.
விதங்கள்.— (1) தசைக்கனிகள் உள்ளோடு வெளியோடு ஓடற்றன.	மேஜையின் பேரிலுள்ள பழங்களைப் பிள்ளைகளைக் கொண்டே சதைப்பற்றுள்ள கனிகளை ஒரு பக்கமாகவும் மேல் பக்கம் சதையில்லாதவற்றை வேறொரு பக்கமாகவும் வைக்கச்செய்து அவற்றைப் பற்றி விவரித்தல்.	உள்ளோட்டுத் தசைக்கனி:—மா-தென்னை. வெள்ளோட்டுத் தசைக்கனி:—விளாம், வில்வம். ஓடற்றன;—கிச்சிலி, திராக்ஷை கொய்யா.
(3) பரீக்ஷை	மேலே போதித்த விஷயங்களைப் பரீக்ஷிப்பது. ஒவ்வொரு வகைப் பழங்களிலும் சிற்சில பழங்களைச் சொல்லும்படி செய்தல்.	பரஸ்பர ஸம்பந்தம். சித்திரம்.— மா, மாதுளை, முதலியவைகளை எழுதல். களிமண்.—ஷெ பழங்களைப்போல் களிமண்ணால் செய்தல்.

பிரஷ்வேலை.—ஷெபழங்களைப்போல் எழுதிஅவற்றிற்கு இயற்கையான வர்ணம் கொடுத்தல் முதலியன.	

N. சுப்ரமணிய ஐயர்,

உபாத்தியாயர், திருவெட்டீஸ்வரன்பேட்டை,

சென்னை.

சுக நூல்.

6-ம் பாடம்.

ஆகாரம்.

நமது சரீரம், தன்னைப் பழுது பார்த்துக்கொள்ளுதல், வளர்தல், தன்னுடைய உஷ்ணத்தைப் பாதுகாத்தல் முதலிய சக்திகளை உபயோகிப்பதற்குத் தகுந்தபடி அதைப் போஷிக்க வேண்டியது அவசியமல்லவா? அந்த அவசியத்தினுடைய உணர்ச்சியே பசி.

சரீரம் வளர்ந்துகொண்டு போகின்ற குழந்தைப் பருவத்திலும், வாலப் பருவத்திலும், சரீரத்தை மிகவும் பலஹீனமாக்கிவிடும் வியாதிகளுக்குப் பிற்காலங்களிலும், தேக உஷ்ணம் குறைந்து, தன்னுடைய இயற்கையான நிலைமை நீங்கியிருக்கும் குளிர்காலத்திலும், இளைப்பைத் தரும்படியான ஒரு கடினமான வேலைக்குப் பிறகும், பசியின் வாதை அதிகம்.

சரீரம் எந்த வஸ்துக்களால் ஆக்கப்பட்டிருக்கின்றதோ, அந்த வஸ்துக்கள் நம்முடைய உணவுப் பொருள்களிலே இருக்க வேண்டும். அந்த வஸ்துக்களின் தொகை மிகவும் சொற்பம். ஏறக்குறைய பத்துத்தான் இருக்கலாம்.

அவற்றிலே முக்கியமானது வெடியுப்பு வாயு. பின் மிகவும் சுத்தமான கரி, பிராணவாயு, ஜலவாயு. மேலும் கொஞ்சம் லவணவாயுவும், கந்தகமும் உண்டு. எலும்பில் கொஞ்சம் நீபாக்கினியும், சுண்ணாம்பும் உண்டு. இரத்தத்தில் கொஞ்சம் இரும்பு; இவ்வளவுதான்.

வெடியுப்புவாயு நிறைந்த உணவுப் பொருள்களாவன: கோழி முட்டையின் வெள்ளைக் கரு, இறைச்சி, பாற்கட்டி, கோதுமை, உளுந்து, மொச்சை முதலிய தானியங்களின் பசையான பாகம்.

உருளைக் கிழங்கு, அரிசி, கம்பு முதலிய தானியங்கள், கரும்பு, பழம், பால், திராட்சை இவற்றின் சர்க்கரை, கொழுப்பு, வெண்ணெய், எண்ணெய், முதலிய வஸ்துக்களில் கரி அதிகம்.

நாம் சாதாரணமாய்ப் பிரதிதினம் உபயோகிக்கும் ஆகாரங்களில் (ரொட்டி, காய், கிழங்கு, கீரை முதலியவற்றில்) மேற்கண்ட வஸ்துக்களைத் தவிர, கொஞ்சம் நிபாக்கினியும் இரும்பும் இருக்கின்றன. நமது சரீரத்துக்கு வேண்டிய லவணவாயு உப்பில் கிடைக்கின்றது.

சில உணவுப் பொருள்கள் "பூர்ணாகாரங்கள்" என்று சொல்லப்படுகின்றன. உதாரணமாக, பாலும், கோழிமுட்டையும். அவை, தனிபாகவே சரீரத்தைப் போஷிக்கும் சக்தியுடையன. வெறும்பாலைக் கொண்டே, மனிதன் ஜீவித்திருக்கலாம், வேறு ஆகாரம் வேண்டியதில்லை.

7-ம் பாடம்.

ஆகாரங்களைத் தேரிந்தேடுத்தல்.

உணவுப் பொருள்கள் அநேகமிருக்கின்றன. ஆகையால் நம்முடைய ஆகாரங்களைத் தெரிந்தெடுத்துக் கொள்வது நன்று. ஒரு ஆகாரத்திற்குப் பதிலாக அதே பயனைத் தரக்கூடிய மற்றொரு ஆகாரத்தை உபயோகப்படுத்தலாம். அம் மாற்றத்தாலே நன்மை ஏற்படுவதற்குப் பின்வரும் விஷயங்களைக் கவனிக்க வேண்டும்:

1. உணவுப் பொருள்களின் விலை.
2. அவற்றின் ஜீர்ணமாகுந் தன்மை.
3. உணவின்பம்.
4. ஆகாரங்களின் போஷண சக்தி.

விலை :—

உணவுப் பொருள்களின் விலை இடத்துக்குத் தக்கவாறு மாறுகின்றது. அதனாலேதான் ஒரு பதார்த்தத்திற்குப் பதிலாக

நயமான மற்றொன்றை உபயோகிக்கும்படி நேரிடுகின்றது. வெண்ணெய் கிராக்கியாக விற்கப்படும் இடங்களில் எண்ணெயை உபயோகிக்கிறார்கள். சில தேசங்களிலே கொழுப்புதான் பிரதானம். தவிரவும், இறைச்சி, பாற்கட்டி, உளுந்து, துவரை, மொச்சை, அவரை இவைகளெல்லாம் ஏறக்குறையச் சமமான போஷண சக்தியை யுடையன வென்பதைத் தெரிந்துகொள்வது நன்று.

ஜீரணமாகுந் தன்மை :—

உணவுப் பொருள்களெல்லாம் ஒரே மாதிரியாக ஜீர்ணமாவதில்லை. சில சுலபமாகவே ஜீர்ணமாகிவிடுகின்றன. வேகாத கோழிமுட்டையின் வெள்ளைக் கரு வெந்தமுட்டையின் வெள்ளைக் கருவைவிட மிகவும் சுலபமாக ஜீர்ணமாகும். காய், கிழங்கு, கீரை வகைகள் தீனிப்பையில் மாம்சத்தைவிட அதிக நேரம் தங்குகின்றன. தீனிப்பைக்குப் பிரயாசத்தைத் தரும் ஆகாரங்கள், சுலபமாக ஜீர்ணமாகும் ஆகாரங்கள்போல அவ்வளவு பலங்கொடுக்கமாட்டா.

உணவின்பம் :—

பொதுவாக ஆகாரம் சாப்பிடுதல், அஃதாவது பசியைத் தணித்துக் கொள்ளுதல், இன்பமாகத்தா னிருக்கின்றது. சமமான போஷண சக்தியையுடைய இரண்டு பதார்த்தங்களில், கூடுமானால் தனக்குப் பிரியமானதை எடுத்துக்கொள்வது நன்றே. அப்படிச் செய்வதில் சுகமுண்டு. தனக்குப் பிரியமான ஆகாரம் சுலபமாகவும், நன்றாகவும் ஜீர்ணமாகிவிடும். எந்த உணவுகள் நமக்குப் பிடிக்கவில்லையோ, அவற்றைக் கட்டாயமாக உட்கொண்டால், அவை நன்றாக ஜீர்ணமாகா.

ஆனாலும், அந்த அருவருப்பைக் கூடிய சீக்கிரத்தில் நிவர்த்தி செய்யப் பழகுதல் நன்று. ஏனென்றால், நமமுடைய ஆகாரங்களை அடிக்கடி மாற்றவேண்டும். உண்மையிலே அவ்வருவருப்பும், அநேக சந்தர்ப்பங்களில் மனோ கற்பிதத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அநேகம் பேர்கள், தாம் ஒருபோதும் ருசி பார்த்திராத ஆகாரங்களையே வெறுக்கிறார்கள். அவை தங்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள்.

போஜனத்தில் பிரியமிருப்பது பயனைத் தருவதாயினும், அவ்வின்பத்துக்கு ஒரு வரையறை யுண்டு. பேருண்டியால், அஃதாவது பெருந் தீனியால் சுகத்துக்குக் கெடுதி நேரிடும். போஜனப் பிரியன் ஒரு நாளும் சௌக்கியமா யிருப்பதில்லை. அவனுக்கு வயிற்றில் கொழுப்புப் படிந்து, தொந்தி பெருத்து, அவனுடைய சரீரம் வாதநோய், சூலைநோய் முதலியவியாதிகளுக்குப் பாத்திரமாகிவிடும். அவனுடைய துர்க்குணத்துக் கேற்ற தண்டனையாயுள்ள கொடுமையான வியாதிகள் அவனைப் பீடித்துக் கொண்டே யிருக்கும்.

தொந்தி பெருத்தலும் உண்மையில் ஒரு வியாதியே. அதற்குத் தப்பவேண்டுமானால், அடிக்கடி நம்மை நிறுத்துப் பார்த்துக் கொள்வது நன்று. சரீரத்தினுடைய எடை ஒழுங்கு தப்பி விபரீதமாக ஏறிக்கொண்டு போனால், ஆகாரத்தின் அளவைக் குறைப்பது நல்லது. அதற்கு விரோதமாக, சரீரத்தின் எடை குறைந்துகொண்டே போனால், அது சௌக்கிய ஹானியின் கண்டிப்பான குறி. உடனே ஒரு வைத்தியரைக்கொண்டு அதற்குத் தகுந்த சிகிச்சை செய்து கொள்ளவேண்டும்.

பொதுவாய் ஆகார மாற்றங்களாலேதான் சரீரம் நன்றாகப் போஷிக்கப் படுகின்றது. மிகவும் ருசியான உணவும், அடுத்தடுத்து உண்போமாயின் இரண்டு மூன்று நாளைக்குமேல் அரோசிகமாய்விடும். தவிரவும் நமது சரீரமாகிய கட்டடத்துக்கு வேண்டிய வஸ்துக்களெல்லாம் ஒரேவிதமான ஆகாரத்தில் கிடையா. அதனாலே ஆகார மாற்றங்கள் அத்தியாவசியகமென்று ஏற்படுகிறது.

ப்ரோபெஸர். என். சுப்பிரமணிய அய்யர்,
புதுச்சேரி.

யுத்தம்.

ஐரோப்பாவில் நடக்கும் சண்டையில் இப்பொழுது ஜெர்மனியர் பலங் குறைந்து வருகின்றன ரென்று தெரிகின்றது. ஜெர்மனியர் கலேயைப் பிடிக்குமாறு செய்த பிரயத்தனங்களெல்லாம் பயன்படாது போயின; ஆனாலும், ஜெர்மனியருக்கும் நேசப் படைகளுக்கும் பிரான்சில் பலமான யுத்தம் நடந்துவருகின்றது.

இருதாரத்தாரும் வீரத்திலும் போர்க்குணங்களிலும் குறைந்த களல்லர். அதனால் விரைவில் ஒருவரை யொருவர் தோல்வியுறச் செய்தல் முடியாது. ருஷியர்கள் கீழ்ப்பிரஷியாவில் பெருந்தி ளாக எதிர்த்து நிற்பதால் ஜெர்மனியர் விரைவில் தோல்வி யடை ந்து பிரான்ஸை விட்டுப் போவார்க ளென்பது நிச்சயம்.

இந்தியாவி லிருந்து இங்கிலீஷ் காரருக்கு உதவியாகப்பிரா ன்ஸுக்குச் சென்ற இந்தியர்கள் உலகமெல்லாம் புகழும்படி அச மானவீரங்காட்டிச் சண்டை செய்துவருகின்றனர். அதனைக் க ஜெர்மானியரே நடுங்கி விட்டனர். பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்கா ரும் இந்தியரின் வீரதீரங்களைப் பற்றிப் புகழ்ந்து கொண்ட கின்றனர். இந்திய வீரர்களின் தீரச்செயல்களைப் பற்றியும் இந் இச்சமயத்தில் செய்து வரும் அளவற்ற உதவிகளைப் ப உலக முழுவதும் ஆச்சரிய மடைகின்றது.

ஜெர்மனியரோடு அசாத்யமான வீரத்தனங்காட்டிச்ச செய்த இந்து வீரரான ஹவில்தார் கங்கா ஸிங் என்பவர்க் டோரியா கிராஸ் என்னும் மிக மேலான பதக்கம் கொடுக்க டிருக்கிறது. 16 இந்து வீரர் சில ஜெர்மனியரோடு கை க சண்டை செய்ய வேண்டியதாக விருந்தது. அவ்வாறு செ சண்டையில் 15 - பேர் இறந்தனர்; இவர் ஒருவர்மட்டும்தப்பி இவரை இறந்து போனாரென்று கருதி ஜெர்மனியர் விட்டுப் யினராம். இவர் ஒருவர் மாத்திரம் 11 ஜெர்மனியரைக் கொ றனர். இவர்க்கும் பல காயங்கள் ஏற்பட்டன.

விக்டோரியா கிராஸ் என்னும் மெடல் இதுகாறும் ஆ கில வீரர்க்கு மட்டும் கொடுக்கப்பட்டு வந்தது. டெல்லி தர்பா க்கு நமது சக்ரவர்த்தியார் விஜயஞ் செய்திருந்த போது இந்தி களுக்கும் மேற்படி பதக்கம் கொடுக்கலாமென்று உத்தரவு செய் தார். இப்பொழுது இப்பதக்கம் பெற்றுள்ளவரான கங்கா ஸிங் மேற்படி பதக்கத்தைப் பெறும் கௌரவத்தில் முதலாவது இந்து ஆவார்.

ருஷிய ஜெர்மன் சண்டையில் ருஷியர் ஜெர்மானியாரை மிகு தியும் தோல்வியடையுமாறு செய்து வருகின்றனர். போலண் டில் ருஷியர்கள் ஏராளமான ஜெர்மனியரைக் கைது செய்து விட் டனர். தந்திகள் கூறுமாறு, இதுகாறும் 2 லட்சம் ஜெர்மனியர்

ருஷியர் வசம் கைதியாக அகப்பட் டிருப்பார்களென்று சொல்ல
ாம்.

ஆஸ்ட்ரியா ஹங்கேரியில் ருஷியர் பிரவேசித்து ஜெயபேரி
ழக்கி வருகின்றனர். ஆஸ்ட்ரியர் ஸெர்வியாவிற்குள் 5 லட்சம்
னையுடன் புகுந்து பெருஞ் சண்டை செய்து வருகின்றனர்.
ல் ஸெர்வியா தோல்வியுறும்போ லிருக்கிறது. அப்படியானால்
ப் பால்கன் நாடுகளும் ஸெர்வியாவுக்கு உதவி புரிய முன்
ம்.

ருஷியத் துருக்கிச் சண்டையில் ருஷியருக் காற்றாது துருக்
ர் ஓடிக்கொண் டிருக்கின்றனர். பல சிறு சண்டைகள் நடந்
க்கின்றன; ஆனால் இருகட்சியாருக்கும் முக்கியமான சண்டை
ம் ஆரம்பமாக வில்லை.

கைக் குடாக்கடலுக் கருகிலும் சூயஸ் கால்வாய்க் கருகி
ரிட்டி ஷாருக்கும் துருக்கியருக்கும் சில சிறு சண்டைகள்
ன. அதில் துருக்கியர் தோல்வி யுற்றனர். துருக்கியருக்
சில இடங்கள் பிரிட்டிஷார் வசமாயின.

இந்த வருஷம் ஆனந்த வருஷமா யிருந்தும் சந்தோஷத்திற்
விஷயங்கள் ஒன்றையுங் காணோம். எல்லாம் யுத்தமாகவே
கின்றன. இன்னும் சில மாதங்களுக்குள்ளாவது இந்த யுத்
முடிவுபெறு மென்று தெரிய வில்லை. அதன் பின் ராக்ஷஸ
கம் பிறந்துவிடும் அதன் பெயரே பயங்கரமா யிருக்கின்றது.

ஐரோப்பிய யுத்த சரித்திரம்.

முதற்பாகம்.

இது கிரௌன் 10 பாரமுள்ள 160 பக்கங்கொண்டது. இதில்
படங்களிருக்கின்றன. அவற்றுள் ஐரோப்பா ஆப்பிரிக்காக்
ண்டங்களின் படங்களும் யுத்தத்திற் பிரவேசித்துள்ள பேரரசர்
ளின் உருவப்படங்களும், சேனாதிபதிகளின் உருவப்படங்களும்,
ஆகாயக்கப்பல், போர்க்கப்பல், சப்மரைன்படவு, டிரெட்னாட் கப்
பல்களின் படங்களும், வேறுபடங்களும் இருக்கின்றன. இந்த
முதற்பாகத்தில் யுத்தத்தின் காரணமும், யுத்தம் ஆரம்பமானது
முதல் செப்டம்பர் மாதம் வரையில் நடைபெற்ற தினசரியுத்த
விவரமும் சுருக்கமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை
ரூபாய் ஒன்று.

மானேஜர்,

லோகோபகாரி ஆபீசு,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.


N·5



N. 5


N·S


M.S.


N.S


N·S


N·S


N·S